**தலைப்பு 299 – இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 299 - இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை<br>2. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள்<br>3. பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள்<br>4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4<br>2.2(அ) i<br>2.2(அ) iii,iv,v,2.2(ஆ)<br>2.2(அ)ii |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை / தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டமை. | 2.1.1 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, | பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாதல் | 2.3 |

நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும்

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அலுவலகத்தின் மீளாய்வாண்டின் மற்றும் கடந்த 2 வருடங்களினதும் அறிக்கைகள் 2018 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

**பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்**

**(அ) மெட்ரிட் கூட்டு பத்திரத்திற்கு நுழையும் செயற்திட்டம்**

2016 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 64 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 62.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சர்வர் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அத் திகதியே அந்த பணிக்காக ரூபா 32.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் 06 மாதங்களினுள் மேற்கொள்ளப்பட வேண்டி போதிலும், 2017 செப்தெம்பர் மாதம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அமைப்புக் குறியீடுகளுடன் இனங்காணாமையால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், 2018 ஒக்தோபர் மாதம் வரையிலும் பெறுகை நடவடிக்கைகள் மீண்டும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்காக 2016 மே 15 ஆந் திகதி முதல் இரண்டு வருட காலப்பகுதிக்காக ரூபா 0.17 மில்லியனான மாதந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதனை உரிய பணிக்கு பயன்படுத்தாது கோவைகள் மற்றும் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்தின் கீழ் வியாபார இலட்சினைகளை பதிவினை நாளதுவரையாக்குதல் மற்றும் புலமை ஆதனங்கள் அதிகாரச்சட்டத்திற்கு சட்டங்களை திருத்துவதற்காக மதியுரை கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 7.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மதியுரை சேவைகளுக்கான பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1, 2.4.1, 2.6.3, 2.8, 6.2 மற்றும் 7.1 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) இந்த செயற்திட்டத்தின் பிரதான மதியுரையாளர் 2017 மே 08 ஆந் திகதி முதல் 2017 யூன் 07 ஆந் திகதி வரை மற்றும் 2017 யூன் 23 ஆந் திகதி முதல் செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை தொடர்ச்சியாக சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலுவலகத்திற்காக குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றினை வாடகைக்கு எடுக்கும் போது பெறுகைகள் திட்டத்திற்கமைய உரிய காலப்பகுதியினுள் பெறுகை நடவடிக்கைகளை நிறைவு செய்யாமை மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 2.8.3, 2.7.4, 2.11.1, 2.12, 5.3.13, 7.12.2(அ), 7.12.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 2016 யூன் 17 ஆந் திகதிய பீஎவ்பீ/ஜீஎம்பீ/சீஜஆர்/2016/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் இந்தக் கட்டிடத்தின் அலுவலக தேவைப்பாடுகளுக்கு பொருந்தாமையால் மீண்டும் கூறுவிலைகள் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முகாமைத்துவ நலிவுகள்

வியாபாரக் குறியீடுகள் தொடர்பில் புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்கு எதிராக வெளிவாரி தரப்பினால் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தொடர்புபட்டிருந்த வழக்குகள் 163 ஆகும்.

## 2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் இலங்கை புலமைச் சொத்து அலுவலக்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 20.93 | 12.90 | 8.03 | 38.37 |
| | மூலதனம் | - | - | - | - |
| | **மொத்தம்** | **20.93** | **12.90** | **8.03** | **38.37** |
| **2014** | மீண்டுவருபவை | 17.24 | 15.70 | 1.54 | 8.93 |
| | மூலதனம் | - | - | - | - |
| | **மொத்தம்** | **17.24** | **15.70** | **1.54** | **8.93** |
| **2015** | மீண்டுவருபவை | 25.87 | 25.28 | 0.59 | 2.28 |
| | மூலதனம் | - | - | - | - |
| | **மொத்தம்** | **25.87** | **25.28** | **0.59** | **2.28** |
| **2016** | மீண்டுவருபவை | 28.75 | 28.15 | 0.60 | 2.09 |
| | மூலதனம் | - | - | - | - |
| | **மொத்தம்** | **28.75** | **28.15** | **0.60** | **2.09** |
| **2017** | மீண்டுவருபவை | 30.88 | 30.73 | 0.15 | 0.49 |
| | மூலதனம் | - | - | - | - |
| | **மொத்தம்** | **30.88** | **30.73** | **0.15** | **0.49** |

மீளாய்வாண்டிற்குரிய நிதியேற்பாடுகளை நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு செய்யப்படாமையால் 03 செலவின விடயங்களுக்காக ரூபா 1.58 மில்லியன் கூட்டுத்தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அலுவலகத்திற்குரிய 29901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.00 | 3.99 | 1.50 | 2.50 | 12.00 | 8.82 |

### 2.6 மனிதவள முகாமைத்துவம்

#### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அலுவலகத்தின் பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அலுவலகத்தின் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 30.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 12 | 06 | 06 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 66 | 43 | 23 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 15 | 14 | 01 |
| | **மொத்தம்** | **98** | **68** | **30** |

(அ) சிரேஷ்ட மட்டத்திலான 6 பதவிகளின் மற்றும் இரண்டாம் நிலையிலுள்ள 23 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த வெற்றிடங்களை நிரப்ப முடியாது போயிருந்தது.

(ஆ) கடந்த 05 வருடங்களினுள் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை கவனத்திற்கொள்ளும் போது 2013 ஆம்

ஆண்டின் போது நிதியேற்பாட்டின் பயன்பாடு 94 சதவீதமாக காணப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டளவில் கிரமமாக 56 சதவீதம் வரை குறைவடைந்து மீளாய்வாண்டின் போது அது 68 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.